செய்தி வெளியீடு எண்:575 நாள்:10.12.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் இன்று (10.12.2016) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தமிழக மக்களின் நலன் ஒன்றையே முழு மூச்சாகக் கொண்டு தமது வாழ்நாள் முழுவதும் அருந்தொண்டாற்றியவரும், உலகமெங்கும் வாழும் தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், இந்திய துணைக்கண்டத்தின் ஈடு இணையற்ற அரசியல் தலைவராகவும், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்ஜிஆர் ஆகியோரின் இலட்சியங்களைக் காத்து, அஇஅதிமுக என்னும் அரசியல் அமைப்பை வியக்க வைக்கிற அளவிற்கு வளர்த்து, 6–வது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இந்தியாவின் புகழ் மிக்க முதல்வராக நல்லாட்சி நடத்தி, தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் செலுத்தியவரும், கடைக்கோடி ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே தனது லட்சியமாக கொண்டவரும், எந்த முடிவை எடுத்தாலும் அதில் உறுதியுடன் இருந்து தமிழர்களின் இன்னல் தீர்ப்பதே தலையாய கடமை என செயல்பட்டவரும், வாழும் போதே வரலாறு ஆனவரும், தமிழக மக்களால் 'அம்மா' என்று அன்புடன் அழைக்கப்பட்டு வந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எதிர்பாராதவிதமாக 5.12.2016 அன்று இயற்கை எய்தியது குறித்து, தமிழக அமைச்சரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வாடும் இலட்சோபலட்சம் இரத்தத்தின் இரத்தமான கழக உடன்பிறப்புகளுக்கும், தமிழக மக்களுக்கும், உலகமெங்கும் வாழும் தமிழர்களுக்கும் தமிழ்நாடு அமைச்சரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

நம் அனைவரின் நெஞ்சில் நிறைந்திருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் திருவுருவப்படத்தை தமிழக சட்டமன்றப் பேரவையில் வைப்பதற்கும்,

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு பாரத ரத்னா விருது அளிப்பதற்கு மைய அரசிற்கு பரிந்துரைப்பதற்கும்,

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு நாடாளுமன்ற வளாகத்தில் முழு திருவுருவ வெண்கல சிலை அமைப்பதற்கு மைய அரசிடம் கோருவதற்கும்

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட அதே இடத்தில் ரூபாய் பதினைந்து கோடியில் நினைவு மண்டபம் அமைப்பதற்கும்,

பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் என்பதை பாரத ரத்னா டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித்தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா நினைவிடம் என பெயர் மாற்றம் செய்யவும் அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**